**DEPOSITION OF WITNESS**
**IN THE COURT OF II ADDITIONAL DISTRICT JUDGE, THOOTHUKUDI.**

Case No. S.C. No. 187/2018
Prosecution side witness for P.W.19

| | | | |
|---|---|---|---|
| Name | திரு.முத்து | Caste | ... |
| Father's/ Husband Name | ... | Calling | ... |
| Village | ... | Religion | ... |
| Taluk | ... | Age | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of **06.03.2026**

A3 is present. A2. A4 are absent, U/s. 317 Cr.P.C. petition filed and allowed.

**<u>முதல் விசாரணை:-</u>**

நான் தற்போது சென்னை மாநகரம், சென்னை அரும்பாக்கம் காவல்நிலையத்தில் காவல் ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். இதற்கு முன்பு 2017 ஆம் வருடம் தூத்துக்குடி மாவட்டம், தாளமுத்துநகர் காவல்நிலையத்தில் ஆய்வாளராக பணிபுரிந்து வந்தேன். அவ்வாறு பணிபுரிந்தபோது தாளமுத்துநகர் காவல்நிலைய குற்ற எண். 2/2017 சட்டபிரிவுகள் 294 பி, 307, 506(2)இதச வழக்கினை எனது விசாரணைக்கு எடுத்துக்கொண்டு சம்பவஇடமான தாய்நகர் கலைஞர் நகர் சென்று அன்றையதினமான 01.01.2017 அன்று 22.00 மணிக்கு சாட்சிகள் முனியசேகர், பார்வதி ஆகியோர்கள் முன்னிலையில் சம்பவஇடத்தை நாலாபுறமும் பார்வையிட்டு பார்வைமகசர், மாதிரிவரைபடம் தயார் செய்தேன். அந்த மாதிரிவரைபடம் நீதிமன்றத்தில் காண்பிக்கப்படுவது அது **அ.சா.ஆ-25** ஆகும். அதற்கான பார்வைமகசர் நீதிமன்றத்தில் காண்பிக்கப்படுவது அது **அ.சா.ஆ-26** ஆகும். சம்பவ இடத்தில் வழக்கிற்கு

தேவையான இரத்தம்பட்ட மண், இரத்தம்படாத மண், மற்றும் சம்பவ இடத்தில் உடைந்து கிடந்த பலகை கட்டை ஆகியவைகளை அதே சாட்சிகள் முன்னிலையில் அத்தாட்சியில் கைப்பற்றினேன். அதற்கான அத்தாட்சி நீதிமன்றத்தில் காண்பிக்கப்படுவது அது **அ.சா.ஆ–27** ஆகும். பின்பு சாட்சிகளை அதே இடத்தில் வைத்து விசாரித்து தனித்தனியாக வாக்குமூலம் பதிவு செய்து கொண்டேன். பின்பு சாட்சிகள் ரஞ்சித் குமார், கார்த்திகைராஜா, ராஜேஷ், முருகேசன், தங்கவேல், முதல்தகவல் அறிக்கை பதிவு செய்த உதவி ஆய்வாளர் திரு.செல்லத்துரை ஆகியோர்களை விசாரித்து தனித்தனியாக வாக்குமூலம் பதிவு செய்து கொண்டேன்.

பின்பு 06.01.2017 ஆம் தேதி இந்த வழக்கில் காயம்பட்ட சங்கர்ராஜா என்பவர் தூத்துக்குடி அரசு மருத்துவமனையில் வைத்து காலை 6.55 மணிக்கு இறந்துவிட்டதாக கிடைத்த இறப்பு இன்டிமேசனை பெற்று காலை 8.00 மணிக்கு வழக்கின் சட்டபிரிவை 294 பி, 307, 506(2)இதசவிலிருந்து 302, 506(2) இதசவாக மாற்றம் செய்து விரைவு தபாலாக குற்றவியல் நீதித்துறை நடுவர் எண்.2 தூத்துக்குடி நீதிமன்றத்திற்கு பெண் காவலர் திருமதி. நிவேதா மூலம் அனுப்பி வைத்தேன். அதற்கான இறப்பு இன்டிமேசன் நீதிமன்றத்தில் காண்பிக்கப்படும் அ.சா.ஆ–22 தான். அதற்கான சட்டபிரிவு மாறுதல் அறிக்கை நீதிமன்றத்தில் காண்பிக்கப்படுவது அது **அ.சா.ஆ–28** ஆகும்.

பின்பு இவ்வழக்கில் இறந்துபோன சங்கர்ராஜா என்பவரின் பிரேதத்தை பிரேத விசாரணை செய்ய வேண்டி பஞ்சாயத்தார்கள் முன்னிலையில் 06.01.2017 அன்று காலை 9.00 மணிக்கு பிரேத விசாரணையை ஆரம்பித்து காலை 11.00 மணிக்கு முடித்து பிரேத விசாரணை அறிக்கை தயார் செய்தேன். அதற்கான பிரேத விசாரணை அறிக்கை நீதிமன்றத்தில் காண்பிக்கப்படுவது அது **அ.சா.ஆ–29** ஆகும்.

பின்பு இறந்தபோன சங்கர்ராஜாவின் இறப்பின் மருத்துவ ரீதியான காரணம் அறியும்பொருட்டு காவலர் செல்வகுமார் என்பவர் மூலம் வேண்டுகோள் கடிதத்துடன் பிரேதத்தையும் கொடுத்து பிரேத பரிசோதனை செய்ய அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தேன். பின்பு சாட்சிகள் ரஞ்சித்குமார், கார்த்திகைராஜா, ராஜேஷ் ஆகியோர்களை மீண்டுமாக விசாரித்து மறுவாக்குமூலம் பதிவு செய்துகொண்டேன். பின்பு சாட்சிகள் குமார், அருண்குமார், ஜேசு என்ற ஜேசுராஜா, சந்தனமாரி, பெண்முதல்நிலை காவலர் நிவேதா, காவலர் செல்வகுமார் ஆகியோர்களை விசாரித்து தனித்தனியாக வாக்குமூலம் பதிவு செய்துகொண்டேன். பின்பு வழக்கின் எதிரிகளை தேடி வரும்போது 07.01.2017 ஆம் தேதி 15.00 மணிக்கு ராஜபாளையம் கடற்கரை அருகே நின்றுகொண்டிருந்த 2 ம் எதிரி ஜெமினி, 3 ம்எதிரி நன்டால் ஆகியோர்களை அடையாளம் கண்டு கைது செய்து மாரிமுத்து, அப்பாத்துரை ஆகியோர்கள் முன்னிலையில் எதிரிகளை விசாரிக்க எதிரிகள் தானாக முன்வந்து கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை அதே சாட்சிகள் முன்னிலையில் பதிவு செய்தும், அந்த ஒப்புதல் வாக்குமூலத்தில் வழக்கு சம்பவத்திற்கு பயன்படுத்திய கத்தியை தனது இடுப்பில் மறைத்து வைத்திருப்பதாகவும், அதை எடுத்து ஆஜர் செய்வதாகவும் கூறியதன்பேரில் அதே சாட்சிகள் முன்னிலையில் அத்தாட்சி பிறப்பித்து கைப்பற்றினேன். அதற்கான அத்தாட்சி நீதிமன்றத்தில் காண்பிக்கப்படுவது அது **அ.சா.ஆ—30** ஆகும். எதிரி ஜெமினி கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தின் அனுமதிக்கப்பட்ட பகுதி நீதிமன்றத்தில் காண்பிக்கப்படுவது அது **அ.சா.ஆ—31** ஆகும்.

பின்னர் ஒப்புதல் வாக்குமூல சாட்சிகள் மாரிமுத்து, அப்பாத்துரை ஆகியோர்களை தனித்தனியாக விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துகொண்டேன். பின்னர் கைது செய்த எதிரிகளையும், கைப்பற்றிய

சொத்துக்களையும் நிலையம் கொண்டு வந்து நிலைய பதிவேடுகளில் பதிவு செய்து பாராவசம் ஒப்படைத்து உச்சநீதிமன்ற விதிகளை கடைபிடித்து எதிரிகளை தக்க வழிக்காவல் மூலம் நீதிமன்ற காவலுக்கு அனுப்பி வைத்தேன். கைப்பற்றிய சொத்துக்களுக்கு படிவம் 91 தயார் செய்துகொண்டேன்.

பின்னர் இந்த வழக்கின் மற்ற எதிரியை தேடி வரும்போது எதிரி மாரிமுத்து அவரது அம்மா எதிரி பாத்திமா ஆகியோர்கள் சாத்தான்குளம் குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றத்தில் சரணடைந்தவர்களை 24.01.2017 ஆம் தேதி 16.00 மணிக்கு நீதிமன்றத்திலிருந்து போலீஸ் காவலுக்கு எடுத்து 16.30 மணிக்கு நிலையம் வந்து நிலைய ஆவணங்களில் பதிவு செய்து அழைப்பு சாட்சிகளான வேலுச்சாமி, கார்த்திக் ஆகியோர்கள் முன்னிலையில் எதிரி மாரிமுத்து எவ்வித தூண்டுதலோ, துன்புறுத்தலோ, ஆசைவார்த்தையோயின்றி விசாரிக்க அவர் தானாக முன்வந்து கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை அதே சாட்சிகள் முன்பு தயார்செய்தும், அந்த ஒப்புதல் வாக்குமூலத்தில் எதிரி சம்பவத்திற்கு பயன்படுத்திய பலகையை சம்பவ இடத்திலேயே போட்டுவிட்டு சென்றுவிட்டதாகவும், மற்றும் அன்றையதினம் வியாபாரத்திற்காக வைத்திருந்த கஞ்சாவை ஒரு பாலிதீன் பையில் போட்டு தனது வீட்டின் செத்தைக்குள் மறைத்து வைத்திருப்பதாகவும் கூறியதன்பேரில் அன்றையதினம் 18.30 மணிக்கு எதிரியின் வீட்டிற்கு சென்று எதிரி மாரிமுத்து எடுத்து ஆஜர் செய்த சுமார் 500 கிராம் பாலிதீன் பையில் உள்ளகஞ்சாவை ஆஜர்செய்ததை அதே சாட்சிகள் முன்பு அத்தாட்சி பிறப்பித்து கைப்பற்றினேன். அதற்கான அத்தாட்சி நீதிமன்றத்தில் காண்பிக்கப்படும் அ.சா.ஆ–9 தான். எதிரி மாரிமுத்து

கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தின் அனுமதிக்கப்பட்ட பகுதி நீதிமன்றத்தில் காண்பிக்கப்படும் அ.சா.ஆ–10 தான்.

பின்னர் எதிரிகள் சொத்துக்கள் சகிதம் நிலையம் கொண்டு வந்து கைப்பற்றப்பட்டசொத்துக்களுக்கு படிவம் 91 தயார்செய்து கொண்டேன். எதிரியை தக்கவழிக்காவல் மூலம் மீண்டுமாக நீதிமன்ற காவலுக்கு அனுப்பி வைத்தேன். எனவே மேற்படி வழக்கின் சட்டபிரிவினை 294 பி, 307, 506(2)இதசவிலிருந்து 294 பி, 307, 506(2) இதச மற்றும் 8(c) r/w 20(b)(II)(A)NDPS Act ன்படி சட்டபிரிவினை மாறுதல் செய்து சட்டபிரிவு மாறுதல் அறிக்கை தயார் செய்து கனம் குற்றவியல் நீதித்துறை நடுவர் எண்.2 தூத்துக்குடி நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தேன். அதற்கான சட்டபிரிவு மாறுதல் அறிக்கை நீதிமன்றத்தில் காண்பிக்கப்படுவது **அ.சா.ஆ.32** ஆகும்.

பின்பு 02.02.2017 ஆம் தேதி கைப்பற்றப்பட்ட சொத்துக்களை படிவம் 91 மூலம் நீதிமன்ற காவலுக்கு அனுப்பி வைத்தேன். அதற்கான படிவம் 91 நீதிமன்றத்தில் காண்பிக்கப்படுவது அது **அ.சா.ஆ–33 வரிசை(3 எண்ணம்)**ஆகும். பி.ஆர்.எண்.26/2017 என எண் பெற்றேன். அதற்கான பொருட்கள் நீதிமன்றத்தில் காண்பிக்கப்படும் இரத்தம்பட்ட மண் சிறிதளவு, **(சொத்துப்பட்டியல் வரிசை எண்.1 ல் உள்ளது) அ.சா.பொ.2**, இரத்தம்படாத மண் சிறிதளவு,**(சொத்துப்பட்டியல் வரிசை எண்.2 ல் உள்ளது) அ.சா.பொ.3**, பலகை கட்டை துண்டுகள் 3 (சொத்துப்பட்டியல் வரிசை எண்.3 ல் உள்ளது) அ.சா.பொ.1 தான். சுமார் 500 கிராம் கஞ்சா பாலிதீன் பையில் கைப்பற்றப்பட்டதை பகுப்பாய்வு செய்வதற்காக 50 கிராம் கஞ்சா மாதிரிக்கு எடுக்கப்பட்டு காக்கி கலர் பேப்பரில் நூலால் சுற்றி SHO சீல் வைக்கப்பட்டது, **(சொத்துப்பட்டியல் வரிசை எண்.4 ல் உள்ளது) அ.சா.பொ.4** ஆகும்.

மீதமுள்ள 450 கிராம் கஞ்சா காக்கி காக்கி கலர் பேப்பரில் நூலால் சுற்றி SHO சீல் வைக்கப்பட்டது,**(சொத்துப்பட்டியல் வரிசை எண்.5 ல் உள்ளது) அ.சா.பொ.5** ஆகும். கத்தி ஒன்று மொத்த நீளம் 25 செ.மீ மரகைப்பிடி 10 செ.மீ காக்கி கலர் பேப்பரில் நூலால் சுற்றி SHO சீல் வைக்கப்பட்டது, **(சொத்துப்பட்டியல் வரிசை எண்.6 ல் உள்ளது) அ.சா.பொ.6** ஆகும்.

பின்னர் அன்றையதினமே தடய சொத்துக்களை நீதிமன்ற பாதுகாப்பிற்கு எடுத்து பி.ஆர்.எண். கொடுத்த குற்றவியல்நீதித்துறை நடுவர் எண்.2 தலைமை எழுத்தர் திரு.இசக்கியப்பன் அவர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துகொண்டேன்.

பின்னர் 02.02.2017 ஆம் தேதி சாட்சிகள் ரஞ்சித்குமார், கார்த்திகைராஜா, ராஜேஷ்,குமார், அருண்குமார், ஜேசு என்ற ஜேசுராஜா, சந்தனமாரி, மகேஷ், தடய அறிவியல் ஆய்வகத்தில் தடய பொருட்களை ஒப்படைத்த காவலர் ராஜாசிங் ஆகியோர்களை தனித்தனியாக விசாரித்து மறுவாக்குமூலம் பதிவுசெய்துகொண்டேன்.

எனது விசாரணையிலிருந்தும், சாட்சிகளின் வாக்குமூலங்களிலிருந்தும் எதிரி குமார் என்பவர் மேற்படி வழக்கு சம்பவத்தில் இல்லை என்றும், எதிரி ராஜாவைத்தான் ராஜகுமார் என்று தவறுதலாக சொல்லியதை எதிரிகள் 5 எதிரி மட்டும்தான் என்று கூறினார்கள். அதனை நீதிமன்றத்திற்கு வேண்டுகோள் கடிதம்கொடுத்து அனுப்பி வைத்தேன்.

02.04.2017 ஆம் தேதி சாட்சிகள் இவ்வழக்கின் தடய சொத்துக்களை இரசாயன பகுப்பாய்வு செய்து ஆய்வறிக்கை வழங்கிய அறிவியல் அலுவலர் திருமதி. கலாலெட்சுமி, திருமதி. ஆனந்தி, ஆகியோர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துகொண்டேன். அவர்கள் வழங்கிய ஆய்வறிக்கைகள் நீதிமன்றத்தில் காண்பிக்கப்படும் T.No. 63/2017

TIN/BIOL/63/2017 மற்றும் T.No. 62/2017 TIN/BIOL/62/2017 தேதி 17.02.2017 ஆகும் அவைகள் நீதிமன்றத்தில் காண்பிக்கப்படும் T.No. 63/2017 TIN/BIOL/63/2017 அது **அ.சா.ஆ– 34** ஆகும். T.No. 62/2017 TIN/BIOL/62/2017 தேதி 17.02.2017 அது **அ.சா.ஆ– 35** ஆகும். இரத்தமாதிரிகள் மற்றும் தடய சொத்துக்கள் சம்மந்தமான குருதி வடிநீரியல் அறிக்கை நீதிமன்றத்தில் காண்பிக்கப்படும் MDU/SER.TI/47/2017 dated 19.04.2017 ஆகும் அது **அ.சா.ஆ– 36 வரிசை(2 எண்ணம்)** ஆகும்.

பின்னர் காயம்பட்ட சங்கர்ராஜாவை மருத்துவமனையில் அனுமதித்து சிகிச்சை செய்த சாட்சிகள் டாக்டர்.பிரவீன் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். இறந்துபோன சங்கர் ராஜாவிற்கு இறப்பு தகவல் கொடுத்த மருத்துவர் மலர்மன்னன் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். பின்னர் இறந்துபோன சங்கர்ராஜாவை பிரேத பரிசோதனை செய்து பிரேத பரிசோதனை அறிக்கை வழங்கிய டாக்டர். மும்மூர்த்தி என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவுசெய்தேன். பகுப்பாய்வு அறிக்கை பெற சென்ற பெண் காவலர் ரபிலா குமாரி என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன்.

பின்னர் 10.07.2017 ஆம் தேதி வழக்கில் நேரில் கண்ட சாட்சிகளான ரஞ்சித்குமார், அருண்குமார் ஆகியோர்களுக்கு 164 குவிமுச–ன் கீழ் வாக்குமூலம் பெற கனம்குற்றவியல் நீதித்துறை நடுவர் எண்.1 தூத்துக்குடி அவர்களுக்கு வேண்டுகோள் கடிதம்கொடுத்தேன். அதற்கான வேண்டுகோள் கடிதம்நீதிமன்றத்தில் காண்பிக்கப்படுவது அது **அ.சா.ஆ–37** ஆகும். அதன்பேரில் நீதிமன்ற உத்தரவுப்பெற்று சாட்சிகளுக்கு அழைப்பாணை சார்பு செய்து 27.07.2017 அன்று சாட்சிகளை கனம்குற்றவியல் நீதித்துறை நடுவர் எண்.1 தூத்துக்குடி நீதிமன்றத்தில் ஆஜர் செய்து, 164 குவிமுச–ன் கீழ் வாக்குமூலம் பெற

நடவடிக்கை மேற்கொண்டேன். பின்னர் அதே தேதியில் சாட்சிகள் ரஞ்சித்குமார், அருண்குமாரை விசாரித்து வாக்குமூலம் பதிவுசெய்தேன்.

பின்னர் எனது விசாரணையிலிருந்தும் சம்பவ சாட்சிகளின் வாக்குமூலங்களிலிருந்தும் சம்பவம் உண்மையென தெரியவருவதால் எதிரிகள் மீது சட்டபிரிவினை 294 பி, 307, 506(2)இதசவிலிருந்து @ 294 பி, 307, 506(2) இதச மற்றும் 8(c) r/w 20(b)(II)(A)NDPS Act லிருந்து 147, 148, 294b, 342, 506(2), 302, 149, r/w302, 34IPC, 8(c) r/w 20(b)(II)(A)NDPS Act ஆக சட்டபிரிவினை மாறுதல் செய்து சட்டபிரிவு மாறுதல் அறிக்கை தயார் செய்து சட்டபிரிவு மாறுதல் அறிக்கையை கனம் குற்றவியல் நீதித்துறை நடுவர் எண்.2 நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தேன். அதற்கான சட்டபிரிவு மாறுதல் அறிக்கை என்னிடம் நீதிமன்றத்தில் காண்பிக்கப்படுவது அது **அ.சா.ஆ– 38** ஆகும்.

பின்னர் எனது விசாரணையை முடித்து எதிரிகள் மீது 147, 148, 294b, 342, 506(2), 302, 149, r/w302, 34 IPC, 8(c) r/w 20(b)(II)(A)NDPS Act ஆக குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன்.

எனது விசாரணையிலிருந்தும், சாட்சிகளின் வாக்குமூலங்களிலிருந்தும் அ.சா.2 கார்த்திக் ராஜா, அ.சா.3 குமார், அ.சா.4 ராஜேஷ், அ.சா.5 அருண்குமார், அ.சா.9 ஜேசுராஜ் ஆகியோர்கள் வழக்கு சம்பவத்தை நேரில் பார்த்தது பற்றியும், வழக்கு சம்பவம் பற்றியும் எனது வாக்குமூலத்தில் உள்ளவாறுதான் கூறியுள்ளார்கள். அ.சா.6 மாரிமுத்து, அ.சா.14 அப்பாதுரைஆகியோர்கள் 2,3 எதிரிகளை கைது செய்யும்போது உடன் இருந்தது பற்றியும், அவர்கள் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலம் மற்றும் அத்தாட்சியில் கையெழுத்திட்டது பற்றியும் எனது வாக்குமூலத்தில் உள்ளவாறுதான் கூறியுள்ளார்கள்.

<u>குறுக்குவிசாரணை (எதிரிகள்தரப்பில்)</u>

காயம்பட்ட நபரை ரஞ்சித்குமார்தான் மருத்துவமனையில் சேர்த்ததாக உள்ளது என்றால் சரிதான். காயம்பட்ட நபரை ஒரு ஆணும், ஒருபெண்ணும் தாக்கியதாகத்தான் அவர் மருத்துவரிடம் கூறியுள்ளார் என்றால் சரிதான். எனது விசாரணையில் ரஞ்சித்குமார் 5 எதிரிகளும் கட்டையால் தாக்கியதாக குறிப்பிட்டு சொல்லப்படவில்லை என்றால் சரிதான். ஒரு மணிக்கு சம்பவம் நடந்ததாகவும் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். அ.சா.17 விபத்து பதிவேடு பதிவு செய்த மருத்துவர் பின்தலையில் காயம் ஏற்பட்டதாகத்தான் சொல்லியுள்ளார் என்றாலும், இடது பக்க தலையில் காயம் ஏற்பட்டதாக சொல்லவில்லை என்றாலும் சரிதான். காது வழியாகவும், மூக்கு வழியாகவும் இரத்தம் வந்ததாக சொல்லவில்லை என்றாலும், வாய்வழியாகத்தான் இரத்தம் வந்ததாக சொல்லியுள்ளார் என்றால் சரிதான். எனது விசாரணையில் அ.சா.1 ரஞ்சித்குமாரும் அ.சா.5 அருண்குமார் ஆகிய 2 பேரும் இறந்துபோன நபருடன் மது அருந்தியதாகத்தான் சொல்லியுள்ளார்கள் என்றால் சரிதான். கத்தியை கைப்பற்றிய அத்தாட்சியில் கத்தியின் இரும்பு பாகம் 25 செ.மீ, மரகைப்பிடி 10 செ.மீ என்றும் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். பலகையை கைப்பற்றிய அத்தாட்சியில் பலகைதுண்டு என்னவகையான மரப்பலகை, அந்த துண்டின் அளவுகள் பற்றி குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். அ.சா.10 தலைமை எழுத்தர் எனது விசாரணையில் என்ன என்ன சான்றுபொருட்கள் எந்த தேதியில் எந்த காவலர் மூலம் ஒப்படைக்கப்பட்டது என்ற விவரமோ, அதை தடய ஆய்விற்கு அனுப்பியதாக எனது விசாரணையில் நான் தயார் செய்த வாக்குமூலத்தில் சொல்லவில்லை என்றால் சரிதான். அ.சா.1, 3 ரகசிய வாக்குமூலம்

போலீசாரின் தூண்டுதலின்பேரில் எப்படி சொல்லவேண்டும் என்று சொல்லிக்கொடுத்து பதிவு செய்யப்பட்டுள்ளது என்றுசொன்னால் சரியல்ல. இறந்துபோன நபரும் மது அருந்தியதாகத்தான் சொல்லப்பட்டுள்ளது என்றால் இல்லை, மதுவின் வாடை வந்ததாக சொல்லப்பட்டுள்ளது. மதுபோதையில் கீழே விழுந்து இறந்துபோன நபருக்கு காயம் பட்டுள்ளது என்றாலும், அ.சா.1 ரஞ்சித்குமாருக்கு எதிரிகளை பிடிக்காது என்பதானாலும் கொலை முயற்சி வழக்கில் உயர் அதிகாரியிடம் நான் நற்பெயர் வாங்க வேண்டுமென்பதற்காகவும் பொய்யாக இந்த எதிரிகள் மீது இந்த வழக்கு போடப்பட்டுள்ளது என்றாலும் சரியல்ல. நான் சொன்ன நாள், நேரத்தில் சம்பவ இடம் சென்றதாகவும், சாட்சிகளை விசாரணை செய்ததாக சொல்வதும் உண்மையல்ல என்றால் சரியல்ல. இந்த வழக்கின் ஆவணங்கள் அனைத்தும் பின்னிட்டு காவல்நிலையத்தில் வைத்து உருவாக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. அ.சா.1, 2டம் பின்னிட்டு கையெழுத்து பெறப்பட்டு பின்னிட்டு முதல்தகவல் அறிக்கை பதிவுசெய்யப்பட்டதால்தான் பின்னிட்டு நீதிமன்றத்திற்கு காலதாமதமாக வந்துள்ளது என்றுசொன்னால் சரியல்ல. குற்ற இறுதி அறிக்கையில் 4ம் எதிரி ராஜாவும், குமாரும் ஒரே நபர்தான் என்று துலங்காது என்றால் சரிதான். நான் சாட்சிகளை சரிவர விசாரணை செய்யாமல் ஒருதலைபட்சமாக எதிரிகள் மீது குற்றஇறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. எதிரிகளுக்கும் இந்த வழக்கிற்கும் எந்தசம்மந்தமும் இல்லை என்றாலும், அவர்கள் மீது பொய்யாக இந்த வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது என்றுசொன்னாலும் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை.

Taken down before me in open court, in the presence of the Accused read over to the witness and admitted by the deponent to be correct

II Additional District& Sessions Judge,
Thoothukudi.